# சேலம் மாநகராட்சி

**2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(1)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

## பொருள்கள்

**மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பாராட்டு தீர்மானம்:–**

1) சீர்மிகு சேலம் மாநகராட்சியின் மாமன்றத்திற்கு மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், அவர்களது தலைமையிலான தமிழக அரசுக்கும் இந்த மாமன்றம் தனது உளங்கனிந்த பாராட்டுதலையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறது.

சேலம் மாநகராட்சியின் நலத்திட்டங்களுக்கும், வளச்சிக்கும் உறுதுணையாக இருந்து பாடுபட்டுவரும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கே.என்.நேரு அவர்களுக்கும், (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு.இரா.இராஜேந்திரன் அவர்களுக்கும் இந்த மாமன்றம் தனது உளங்கனிந்த பாராட்டுதலையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் – தீர்மானம் நிறைவேறியது.

**2)** சேலம் மாநகராட்சி சட்டம் **1994–ஐ** தழுவி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி **1.** கணக்கு (Accounts Committee), **2.**கல்வி (Education Committee), **3.**பொது சுகாதாரம் (Public Health Committee), **4.**வரிவிதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance Committee), **5.**நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement committee) மற்றும் **6.** பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழுக்களை உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.**545**, நாள்.**22.11.2021–**ன்படி மகளிருக்கு 50% சதவீதத்திற்கும் குறைவில்லாது இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதால், கீழ்கண்ட விவரப்படி ஆறு நிலைக்குழுக்களில் மாமன்ற உறுப்பினர்களில் பெண்கள் இட ஒதுக்கீடு எண்ணிக்கையினை நிர்ணயம் செய்வது குறித்தும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிலைக்குழு விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | கணக்கு (Accounts Committee) | 4 | 5 | 9 |
| 2. | கல்வி (Education Committee) | 4 | 5 | 9 |
| 3. | பொது சுகாதாரம் (Public Health Committee) | 4 | 5 | 9 |
| 4. | வரிவிதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance Committee) | 4 | 5 | 9 |
| 5. | நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement committee) | 4 | 5 | 9 |
| 6. | பணிகள் (Works Committee) | 4 | 5 | 9 |
| மொத்தம் | | **24** | **30** | **54** |

தொடர்ச்சி...

<u>அலுவலக குறிப்பு :</u>

1. ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 545, நாள். 22.11.2021ன்படி 50% சதவீதத்திற்கு குறைவில்லாமல் பெண்களுக்கான இடஒதுக்கீடு நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம்.

2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

(சி5/6314/2021)

**தீர்மானம்.** அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

3) சேலம் மாநகராட்சி, ஜாகீர் அம்மாபாளையம் கிராமம், Ward–A, Block–12, T.S.No.15/16 (பழைய புல எண்.194/5), விஸ்தீர்ணம் 1.0435.0 ச.மீ தீர்வை ஏற்படாத தரிசு கல்லாங்குத்து (பூச்சிக்கரடு) என வகைபாடு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலத்தில் 0.0497.0 ச.மீ நிலத்தில் மட்டும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பிரிவு அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக கூடுதல் நிலம் கோரியதாகவும், சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு நிலமாறுதல் செய்வதற்கு சேலம் மாநகராட்சியின் கருத்திசைவு அனுப்பி வைக்க வருவாய் வட்டாட்சியர் (மேற்கு) சேலம், அவர்களின் கடிதம் ந.க.எண்.81/2022/அ4, நாள்:24.01.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், மேற்கு வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமம், புல எண்.194/5, பரப்பு 1.26.5 அரசு புறம்போக்கு கல்லாங்குத்து (பூச்சிக்கரடு) என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் 12,000 சதுரடி நிலம் மட்டும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு நில மாறுதல் செய்ய வரப்பெற்ற சேலம் மேற்கு அவர்களின் கடிதம் ந.க.எண்.582/2019/ஆ2, நாள்:31.05.2019–ன்படி சேலம் மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.15, நாள்:03.06.2019–ல் வட்டாட்சியர் மேற்கு சேலம் அவர்களுக்கு மாநகராட்சியின் தடையின்மைச் சான்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சேலம் மாவட்டம் மேற்கு வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமம், Ward–A, Block–12, T.S.No.15/16 (பழைய புல எண்.194/5), விஸ்தீர்ணம் 1.0435.0 ச.மீ தீர்வை ஏற்படாத தரிசு, கல்லாங்குத்து (பூச்சிக்கரடு) என வகைபாடு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலத்தில் கூடுதலாக 0.0497.0 ச.மீ நிலத்தில் மட்டும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு நில மாறுதல் செய்ய ஆட்சேபணையின்மை சான்று வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ9/1705/2022)

**தீர்மானம்.** அனுமதிக்கப்பட்டது.

4) 2021–2022ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். 31 மற்றும் 29க்கு உட்பட்ட பகுதியில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி சிப்பம் எண்.V –மதிப்பீடு தொகை ரூ.68.00 இலட்சத்திற்கு மெஸர்ஸ். ஸ்ரீ வைத்தீஸ்வரா&கோ, சேலம் நிறுவனத்திற்கு 27.12.2021ம் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி கோட்டம் எண்.31ல் கவனக்குறைவாக பணி மேற்கொள்ளும் போது ஹபீப் தெரு, பால் தெரு மற்றும் துபால் அகமது தெரு பகுதியில் சுமார் 45 வீடுகளுக்கான குடிநீர் பைப்புகள் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு உடைப்பு ஏற்பட்டுள்ள குடிநீர் பைப்புகளை சரிசெய்யுமாறு ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் மூலம் 02.02.2022ம் தேதி பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பணியினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததார் பணி மேற்கொள்ளவில்லை. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி குடிநீர் பணியினை துறை மூலம் மேற்கொள்ள தோராய செலவின தொகை ரூ. 1,00,000/–ம் ஆகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளதால், தமிழ் நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.15ன் கீழ் பணியின் அவசரம், அவசியம் கருதி உடனடியாக சரி செய்ய வேண்டியுள்ளதால், பணியினை நிறைவேற்றுவதற்கு 02.02.2022ம் தேதியில் உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மெஸர்ஸ். எம்.எஸ்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன், சேலம் | ரூ.97,759.20 குறைவு |
| 2 | மெஸர்ஸ். ரேவதி கன்ஸ்ட்ரக்ஷன், சேலம் | ரூ.99,993.60 அதிகம் |
| 3. | மெஸர்ஸ், சுவாதி கன்ஸ்ட்ரக்ஷன், சேலம் | ரூ.1,00,464.00 அதிகம் |

மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள மெஸர்ஸ். எம்.எஸ்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன், சேலம் (L1) என்ற விலைப்புள்ளிதாரர், ரூ.97,759.20/– உத்தேச தொகையைவிட குறைவாக அளித்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் கடிதம் எண் 253 /இஎல்இசி / 08–2, நாள் 01.09.2008 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.258 நாள் 26.08.2008 ல் தெரிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி சட்ட திருத்த விதிகளின்படி (99,100 மற்றும் 101 ன்படி) மற்றும் மன்றம் தனது 30.09.2008ம் தேதிய, 290 எண் கொண்ட மன்ற தீர்மானத்தின்படியும், குறைவாக வழங்கியுள்ள விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மெஸர்ஸ். எம்.எஸ்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன், சேலம் நிறுவனத்திற்கு 02.02.2022ம் தேதியில் பணி ஆணை வழங்கியதையும், பணியை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொண்டதையும், விலைப்புள்ளிதாரருக்கு செலவினத் தொகையினை 2021–2022 மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் வழங்கவும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி 02.02.2022ம் தேதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின்முன் அனுமதியினை பெற்று எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பின்னேற்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

**(இ4/ம.எண்.23/ஆர்/2021–2022)**

தீர்மானம். அங்கீகரிக்கப்பட்டது.

**5)** சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் மண்டத்திற்குட்பட்ட நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் இனம் வசூலித்துக் கொள்ளும் உரிமை கடந்த **01.04.2021–**ம் தேதி முதல் வாரம் ஒன்றுக்கு ரூ.**54,500/–** வீதம் பெற்றதாகவும், **01.04.2021–**ம் தேதி முதல் **31.03.2022–**ம் தேதி வரை உள்ள மொத்த குத்தகை தொகை ரூ.**28,41,890/–** ஆகும். இதில் செலுத்தப்பட்ட தொகை ரூ.**14,00,000/–**, சரிசெய்து கொள்ள தெரிவிக்கப்பட்ட தொகை ரூ.**6,06,000/–** மற்றும் குத்தகை உரிமத்திற்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.**2,00,000/–** ஆக மொத்தம் ரூ.**22,06,000/–** ஐ செலுத்தப்பட்டுள்ளது. தன்னால் மேற்கொண்டு சம்மந்தப்பட்ட குத்தகை இனத்தினை நடத்த முடியவில்லை என தெரிவித்து இரத்து செய்து உத்தரவு வழங்குமாறு **07.03.2022–**ம் தேதிய விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி திரு.எம்.சண்முகசுந்தரம் த/பெ. மாது என்பவர் **01.04.2021** முதல் குத்தகை இனத்தினை ஏற்று அதற்கான குத்தகை விதிகளின்படி அதற்கான கட்டணங்களை வசூலித்துக் கொள்ளும் உரிமையினை இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.கே**1/416/2021**, நாள்.**30.03.2021–**ந் தேதியில் உத்திரவு பெற்றுக் கொண்டு மேற்கண்ட நாளங்காடி பகுதியில் குத்தகை இனங்களை வசூலிக்கும் பொறுப்புகளை மேற்கொண்டு வருகிறார்.

நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் இனத்திற்கு சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் **01.04.2021–**ம் தேதி முதல் **31.03.2022–**ம் தேதி வரை உள்ள காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. முதலாம் ஆண்டு மொத்த குத்தகை தொகை ரூ.**28,41,890/–**ல் தற்போது வரை செலுத்தப்பட்ட தொகை ரூ.**14,00,000/–** மற்றும் **1.**திரு.சி.திருவருட்செல்வன் என்பவரால் இவ்வினத்திற்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.**2,02,000/–**, **2.**திருமதி.ஜெயாசுப்ரமணி என்பவரால் முனியப்பன் கோவில் எதிர்புறம் சுங்க கட்டண வசூல் இனத்திற்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.**2,02,000/–** மற்றும் **3.**செல்வி.பூர்ணிமா த/பெ.சுப்ரமணி என்பவரால் முனியப்பன் கோவில் எதிர்புறம் சுங்க கட்டண வசூல் இனத்திற்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.**2,02,000/–** ஆகியவற்றின் மூலம் செலுத்தப்பட்ட மொத்த முன்வைப்புத்தொகைகள் ரூ.**6,06,000/–** ஆக மொத்தம் ரூ.**20,06,000/–**ம் செலுத்தப்பட்டுள்ளது. மீதம் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை ரூ.**8,35,890/–**னை செலுத்தக்கோரி சம்மந்தப்பட்ட குத்தகைதாரருக்கு இறுதி அறிவிப்பு அனுப்பலாம்.

தொடர்ச்சி..

மேலும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு கட்டுப்பாடுகள் மற்றும் **2016–2017**–ம் ஆண்டிற்கான ஆண்டு உரிமையாணை நிபந்தனைகளின்படி நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் (வாரம்) இனத்திற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு முறையே ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் நாள் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் **5** % உயர்வு செய்தும், இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் **5** % உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும் குத்தகை நிர்ணயம் செய்து உரிமம் வழங்கிட ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பெற்று அதனை இறுதி செய்திட கால அவகாசம் தேவைப்படுவதால் **08.03.2022**ம் தேதி முதல் மேற்படி குத்தகை இனத்தை மாநகராட்சி வசம் சுவாதீனம் பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை இறுதி செய்யும் வரை துறை மூலம் வசூல் நடவடிக்கை (Department Collection) மேற்கொள்ளலாம்.

எனவே மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் இப்பொருள் தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான தொகையை சூரமங்கலம் வார்டு அலுவலகத்திலிருந்து வழங்கவும், மன்றத்திற்கு பொருள் வைக்கலாம்.

மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை நாளது தேதி ரூ.**6,35,890/–**னை செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. எனவே சம்மந்தப்பட்ட குத்தகை இனத்தின் குத்தகைதாரர் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகைகளை செலுத்தாதற்கு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு, குத்தகை ஒப்படைக்கும் காலம் வரை துறை மூலம் வசூல் செய்யலாம். மேலும் தனியர் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகை ரூ.**2,00,000/–** ஈடுசெய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைத்துக்கொள்ளவும், தனியருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கே1/416/2021)**

**தீர்மானம்.** மாநகராட்சிக்கு இழப்பேதுமில்லாமல் குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு குத்தகை தாரரிடமிருந்து வசூல் செய்யவும், துறைமூலம் வசூல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கப்பட்டது.

6) சேலம் மாநகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.31ல் மைய அலுவலகத்தில் உள்ள மன்ற கூட்டரங்கில் மாமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்காக மைக் மற்றும் அதற்குண்டான இதர உபகரணங்கள் வாங்கி பொருத்தவும், மாண்புமிகு மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோர் அறைகளை பழுதுபார்த்து புதுப்பித்தல் பணிக்குத் தொழில் நுட்ப அங்கீகாரத்துடன் தயாரித்து வழங்கிய மதிப்பீடு ரூ.24,90,000 /–ல் மேற்படி பணியை நிறைவேற்ற 24.02.2022 ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி விலைப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/S SS Tech Salem Commercials Pvt. Ltd., Salem. . | ரூ. 20,74,491 |
| 2. | M/S Highbrow Cybernetics India Pvt Ltd., Salem. | ரூ. 20,79,490 |
| 3 | M/S Triumph guidance control & solution pvt ltd., Salem. | ரூ.20,93,232 |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்டுள்ள மெசர்ஸ். எஸ்.எஸ். டெக் சேலம் கமர்சியல்ஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் (L1)அவர்களிடமிருந்து ரூ.20,74,491.00 என வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாநகராட்சி விதி எண்: 15ன் கீழ் பணி ஆணை வழங்கி மேற்கண்ட பணிக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

அங்கீகரிக்கலாம்.

**(இ3/ம.எண்.3264/2022)**

**தீர்மானம்.** அங்கீகரிக்கப்பட்டது.

7) வாக்கு எண்ணும் மையத்தில் அலுவலர்கள், வேட்பாளர்கள், முகவர்கள் போன்ற நிறைய பேர் இருக்கும் காரணத்தால் சுகாதாரம் கருதி ஜன்னல் பகுதிகளில் Exhaust Fan, 125 KVA Diesel Genset (with Stand by) 5A Plug, 15A plug, pedestal Fan, LED light, LED light with Adjustable stand, panel Board பத்திரிக்கையாளர் அறை, காவல் துறை, கண்காணிப்பாளர் அறை, தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் பார்வையாளர்கள் அறை ஆகியவற்றில் தேவையான மின்வசதி மற்றும் இணையதள இணைக்கும் ஒயரிங் வசதி போன்ற அனைத்து தேர்தல் சம்பந்தமான தற்காலிக பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.8,25,000/–க்கு மாநகராட்சி விதி எண்:15 இன் கீழ் 24.01.2022 ஆம் தேதியன்று அறிவிப்பு செய்யப்பட்டு 28.01.2022 ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

கீழ் கண்டுள்ள விபரப்படி மூன்று எண்ணிக்கையிலான விலைப்புள்ளி தொகைகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரங்கள் முறையே,

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விபரம் | விலை மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1 | D.காமராஜ், சேலம் | 5,47,312 |
| 2 | கதிர்வேல் எலக்ட்ரிக் ஒர்க்ஸ், சேலம் | 5,91,570 |
| 3 | ஜெய சுதா எலக்ட்ரிக் கான்ராக்டர், சேலம் | 5,59,385 |

எனவே மேற்படியான மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்: 1ல் கண்டுள்ள D.காமராஜ், சேலம் (L1) என்பவரின் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.5,47,312/–யை ஏற்றுக் கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணி என்பதனால் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஆணையாளர் / தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி, பணியை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக க்குறிப்பு: –

அ) பின்னேற்பு வழங்கலாம்.

ஆ) நகர்புற உள்ளாட்சி தேர்தல்பணி என்பதனால் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ1/418/2021–22)

**தீர்மானம்.** அலுவலகக்குறிப்பு அ, ஆ அங்கீரிககப்பட்டது.

8) வாக்கு எண்ணும் மையத்தில் கட்டுப்பாட்டு கருவி, வாக்கு பதியும் கருவி ஆகியவை பாதுகாப்பாக இருப்பு அறையில் வைக்கவும், பிறகு தேர்தல் அன்று மண்டல அலுவலர்களால் வாக்குச்சாவடிகளில் வாக்குகள் பதியப்பட்ட கட்டுப்பாட்டு கருவி, வாக்கு பதியும் கருவி மற்றும் அதற்குரிய ஆவணங்கள் யாவும் சரிபார்த்து வாங்கவும் அதனை பாதுகாப்பாக இருப்பு அறையில் வாக்கு சாவடி வரிசை வாரியாக வைக்கவும் மற்றும் RECEPTION CENTRE ARRANGEMENTS ஆகிய தேர்தல் சம்பந்தமான தற்காலிக பணிகள் மேற்கொள்ள ஏதுவாக மதிப்பீடு தொகை ரூ.42,00,000/–க்கு மாநகராட்சி விதி எண்:15 இன் கீழ் 24.01.2022 ஆம் தேதியன்று அறிவிப்பு செய்யப்பட்டு 28.01.2022 ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

கீழ் கண்டுள்ள விபரப்படி மூன்று எண்ணிக்கையிலான விலைப்புள்ளி தொகைகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரங்கள் முறையே,

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விபரம் | விலை மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1 | D.காமராஜ், சேலம் | 32,88,681.34 |
| 2 | பவுணாம்பாள் கன்ஸ்ரக்சன்ஸ், சேலம் | 34,91,880.51 |
| 3 | எம்.சிவக்குமார், சேலம் | 41,11,806.71 |

எனவே மேற்படியான மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்: 1ல் கண்டுள்ள D.காமராஜ், சேலம் (L1) என்பவரின் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.32,88,681.34/–யை ஏற்றுக் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணி என்பதனால் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஆணையாளர் / தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி, பணியை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: –

அ) பின்னேற்பு வழங்கலாம்.

ஆ) நகர்புற உள்ளாட்சி தேர்தல்பணி என்பதனால் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ1/419/2021–22)

**தீர்மானம்.** அலுவலகக்குறிப்பு அ, ஆ அங்கீகரிக்கப்பட்டது.

**9)** சேலம் மாநகராட்சி பொதுநிதி **2020–21** ன் கீழ், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**31**–இல் மைய அலுவலகத்தில் உள்ள மாமன்ற கூட்ட அரங்கிற்கு வர்ணம் பூசுதல் மற்றும் தரை விரிப்பான் அமைத்தல் போன்ற பராமரிப்பு பணிக்குத் தொழில் நுட்ப அங்கீகாரத்துடன் தயாரித்து வழங்கிய மதிப்பீடு ரூ.**14,10,000** /–ல் மேற்படி பணியை நிறைவேற்ற **28.01.2022** ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி விலைப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/S SS Tech Salem Commercials Pvt. Ltd., Salem. . | ரூ. **11,71,239** |
| 2. | M/S Highbrow Cybernetics India Pvt Ltd., Salem. | ரூ. **12,07,696** |
| 3 | M/S Triumph guidance control & solution pvt ltd., Salem. | ரூ.**12,20,921** |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் **1** ல் கண்டுள்ள மெசர்ஸ். எஸ்.எஸ். டெக் சேலம் கமர்சியல்ஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் (L1)அவர்களிடமிருந்து ரூ.**11,71,239.00** என வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாநகராட்சி விதி எண்: **15**ன் கீழ் பணி ஆணை வழங்கி மேற்கண்ட பணிக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

அங்கீகரிக்கலாம்.

**(இ3/ம.எண்.416/பி/2021–2022)**

**தீர்மானம்.** அங்கீகரிக்கப்பட்டது.

(ஒம்) ஆ.இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
21–03–2022.